# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2410 - 2024 නොවැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2024.11.08

*2410 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 2157 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 2156 | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## மூதூர் மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்

### பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல் - 2024.11.23

1. மூதூர், மூதூர் மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அரசுடமையாக்கப்பட்டதும் உரிமைகோரப்படாத பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை 2024.11.23 ஆந் திகதியன்று மு. ப. 9.00 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் நடாத்தப்படும்.

2. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 அரை மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

3. பகிரங்க ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கப்பெறாதவிடத்து ஏலவிற்பனையிலிருந்து மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

4. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. பொருட்களைக் கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய ஆளடையாள அட்டையை கொண்டு வர வேண்டும்.

தஸ்னீம் முகம்மட் பௌஸான்,
மாவட்ட நீதிபதி/நீதிவான்.

மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்,
மூதூர்.

### பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களின் விபரங்கள்

### மூதூர் மாவட்ட /நீதிவான் நீதிமன்றம் - 2024.11.23

| தொடர் இல. | வழக்கு இல. | வழக்குச் சான்றுப் பொருட்கள் | அளவு |
|---|---|---|---|
| 01 | - | துளையிடப்பட்ட பெரிய இரும்பு வாளிகள் | 70 |
| 02 | - | துளையிடப்பட்ட சிறிய இரும்பு வாளிகள் | 40 |
| 03 | - | சவள் | 95 |
| 04 | - | கோடாரிகள் | 14 |
| 05 | - | மண்வெட்டிகள் | 18 |
| 06 | - | கத்திகள் | 25 |
| 07 | - | காட்டுக்கத்திகள் | 58 |
| 08 | - | பெரிய சுத்தியல்கள் | 05 |
| 09 | - | அலவாங்குகள் | 10 |

| தொடர் இல. | வழக்கு இல. | வழக்குச் சான்றுப் பொருட்கள் | அளவு |
|---|---|---|---|
| 10 | - | அலுமினிய குடங்கள் | 05 |
| 11 | - | பெரிய சுத்தியல்கள் | 04 |
| 12 | - | அலுமினிய தாச்சிகள் | 04 |
| 13 | - | பெரிய மரம் வெட்டும் வாள் | 01 |
| 14 | - | சிறிய மரம் வெட்டும் வாள் | 02 |
| 15 | - | சிறிய பீப்பாய்கள் | 04 |
| 16 | - | பிக்காசோகள் | 02 |
| 17 | MC/ 57008/ For/ 24 | விறகுகள் | 01 $M^3$ |
| 18 | MC/ 57632/ For/ 24 | விறகுகள் | 2.5 $M^3$ |
| 19 | MC/ 57906/ For/ 24 | விறகுகள் | 3.5 $M^3$ |
| 20 | AR/02/ 23 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 21 | MC/ 49282/ 21 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 22 | MC/ 55687/ 23 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 23 | MC/ 41173/ 19 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 24 | MC/ 50815/ 22 | துவிச்சக்கர வண்டி | 01 |

*11- 183*

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

### பகிரங்க அறிவித்தல்

### *சிரிஸ் ( பிரைவட்) லிமிட்டட் (PV 1600),சிரிஸ் ஹொலிஸ்டிக் ( பிரைவட்) லிமிட்டட் (PV 00205309) மற்றும் சிரிஸ் சாய் லோட்டஸ் ( பிரைவட்) லிமிட்டட் ( PV 00202257) என்பவற்றின் ஒன்றிணைத்தல் அறிவித்தல்*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1)ஆம் பிரிவின் விதிகளுக்கமைய அமுலுக்கு வருமாறு சிரிஸ் ( பிரைவட்) லிமிட்டட், சிரிஸ் ஹொலிக்ஸ்டிக் ( பிரைவட்) மற்றும் சிரிஸ் சாய் லோட்டஸ் ( பிரைவட்) லிமிட்டட் இன் பணிப்பாளர் சபையினால் இந்தக் கம்பனிகளின் கூட்டிணைப்பு தீர்க்கப்படுகிறது. அத்துடன் சிரிஸ் ( பிரைவட்) லிமிட்டட் மற்றும் சிரிஸ் ஹொலிஸ்டிக் ( பிரைவட்) லிமிட்டட் மற்றும் சிரிஸ் சாய் லோட்டஸ் ( பிரைவட்) லிமிட்டட் என்பன ஒன்றிணைக்கப்பட்டு ஓர் தனி நிறுவனமாக சிரிஸ் (பிரைவட்) லிமிட்டட் என்ற பெயரில் தொடர்ந்தும் இருக்கும்.*

*கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படும் திகதியில் இந்த ஒன்றிணைப்பு அமுலுக்கு வரும்.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,*

*சிரிஸ் ( பிரைவட்) லிமிட்டட்.*

*11- 95*

## கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்புக்கான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(1) ஆம் பிரிவின் கீழ், ஸ்வதேஷி பிரின்டர்ஸ் ( பிறைவட்) லிமிட்டெட்டின் ( நிறுவன இல. PV 5960) ஒரு மில்லியன் ஐந்நூறாயிரம் ரூபாவின் (ரூ.1,500, 000) தற்போதைய பெறுமதியில் இருந்து பதினைந்து ரூபா மாத்திரம் (ரூபா15.00) வரை கூறப்பட்ட மூலதனத்தை குறைப்பதற்கு 2017, ஏப்பிறல் 03 ஆந் திகதி இடம்பெற்ற பங்குதாரர்களின் விசேட பொதுக் குழு கூட்டத்தில் நிறுவனத்தின் பங்குதாரர்களினால் விசேட தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது. 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் விதிகளின்படி இந்த அறிவித்தல் வெளியிடப்படுகிறது.*

பணிப்பாளர் சபையின் ஆணைப்படி,

ஸ்வதேஷி பிரின்டர்ஸ் ( பிறைவட்) லிமிட்டெட்.

*11- 145*

---

## அறிவித்தல்

### ரெக்கிட் பென்கிசர் (லங்கா) லிமிடெட் (பதிவு இல. PB 313) ( பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல. 25, ஷெர்பரி பார்க், கொழும்பு 04)

*ரெக்கிட் பென்கிசர் (லங்கா) லிமிடெட் நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட மூலதனக் குறைப்பு*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59 இன் படி வரையறுக்கப்பட்ட ரெக்கிட் பென்கிசர் ( லங்கா) லிமிடெட் ( நிறுவனம்) நிறுவனத்தின் சாதாரண பங்குகளை உள்ளடக்கிய ரூ. 3, 620, 496, 000 ஐ குறிப்பிடப்பட்ட மூலதனம் நிறுவனத்தின் பங்குதாரரான ரெக்கிட் பென்கிசர் ஹெல்த் (ஹோல்டிங்ஸ்) லிமிடெட் நிறுவனத்திற்கு ரூ. 2,374, 300, 783 ஐ மொத்தத் தொகையாக செலுத்துவதன் மூலம் சாதாரண பங்கு 317, 992 ஐ கொண்டிருக்கும் ரூபா 1,246, 195, 217 வரை குறைப்பது குறித்து இதன் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து அறுபது (60) நாட்களுக்கு சிறப்புத் தீர்மானத்தின் மூலம் நிறுவனத்தின் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டது.*

பணிப்பாளர் சபையின் உத்தரவுப்படி,

ரெக்கிட் பென்கிசர் ( லங்கா ) லிமிடெட்,
ஜேசி மற்றும் கம்பனி,
கம்பனியின் செயலாளர்கள்.

*11- 136*

---

## அறிவித்தல்

### ஏசிஎஸ் கெப்பிட்டல் ( பி.வி.டி.) லிமிடெட்
### ( கம்பனி பதிவு இல. PV 4337)
### கூறப்பட்ட மூலதனத்தின் பிரேரிக்கப்பட்ட குறைப்பு

*ஏசிஎஸ் கெப்பிட்டல் ( பி.வி.டி.) லிமிடெட்டின் ( கம்பனி) பணிப்பாளர்களின் சபை கம்பனியின் நூற்று நான்கு மில்லியன் அறுநூற்று எண்பதாயிரத்து எண்ணூற்று அறுபத்து மூன்று (ரூ. 104,680,863.00) சாதாரண பங்குகளைக் குறிக்கும் இருநூற்று அறுபத்தேழு மில்லியன் முந்நூற்று தொண்ணூறாயிரம் ரூபா (ரூ. 267,390,000.00) கூறப்பட்ட மூலதனத்தை ரூபா நூற்று ஐம்பத்து நாலு மில்லியன் இருநூற்றுத் தொண்ணூறாயிரம் (ரூ. 154,290,000.00) ஆகியதொரு கூறப்பட்ட மூலதனமாக குறைப்பதற்காக அதன் பங்குதாரர்களுக்கு பரிந்துரை செய்வதற்கு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 59 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப தீர்மானித்துள்ளது பற்றி இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது. இவ்விடயத்தில் சாதாரண பங்குகளின் எண்ணிக்கை மாற்றமில்லாது தொடர்ந்து அவ்வாறே இருக்கும்.*

மேலே கூறப்பட்ட குறைப்பு கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்திலிருந்து ரூபா நூற்றுப்பதின்மூன்று மில்லியன் நூறாயிரம் வரை (ரூ. 113,100,000.00) கம்பனியின் முன் கொண்டுவரப்பட்ட இழப்புக்களைக் கழித்தெழுதுவதன் மூலம் மேற்கொள்ளப்படும்.

கூறப்பட்ட மூலதனத்தின் பிரேரிக்கப்பட்ட குறைப்புக்காக பங்குதாரர்களின் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக ஒரு விசேட தீர்மானத்தின் வழியாக 2025, சனவரி 10 ஆந் திகதி கம்பனியின் ஒரு அதிவிசேட பொதுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஏசிஎஸ் கெப்பிட்டல்( பிரை) லிமிடெட்.

11- 197